# Tamil Nadu Electricity Board Engineers' Sangam

## தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம்

Regd. No. 124/MDS (Recognised)
(Affiliated to All India Federation of Power Diploma Engineers)
793, Electricity Avenue, Anna Salai, Chennai - 600 002.
44, Ramasamy Garden Street, Royapetah, Chennai - 600 014
Phone : 28521968, E-mail : tnebes@yahoo.co.in

| PRESIDENT | GENERAL SECRETARY | TREASURER |
|---|---|---|
| **Er. A.ANTONYPADOVARAJ** | **Er. V. ASHOKKUMAR** | **Er. R.BADRINARAYANAN** |


நாள்: 17.09.2014

பெறுதல்

ஆசிரியர்,
தினமலர்,
சென்னை.

ஐயா,

பொருள்: மின்சார வாரியம் தொடர்பான செய்தி – நாள் 16.09.2014 – கருத்து தெரிவித்தல் – தொடர்பாக.

பார்வை: தினமலர் (சென்னை) நாள் 16.09.2014.

---

வணக்கம்.

தங்களது தினமலர் நாளிதழ், சென்னை பதிப்பில், 16.09.2014 அன்று "பிரச்சனைக்கு தீர்வு காணாமல் மின் நுகர்வோர் இழுத்தடிப்பு" அடம் பிடிக்கும் பொறியாளர்களுக்கு இன்று "அர்ச்சனை" – என்ற தலைப்பில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. கூட்டம் நடைபெறும் முன்னரே வெளியிடப்பட்டுள்ள செய்தி இது. இதுபோன்று செய்திகள் அடிக்கடி வெளியிடப்படுவதால் 7000 பொறியாளர்களை உறுப்பினர்களாக கொண்டுள்ள தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கத்தின் சார்பில் கீழ்காணும் தகவல்களை தெரிவிக்கின்றோம்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் உள்ள கோடிக்கணக்கான பயனீட்டாளர்களின் குறைபாடுகளை மின்சார வாரியம் விரைவாகவும், குறித்த காலத்திற்குள்ளும் தீர்த்து வருகின்றது.

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரியும் பிரிவுப் பொறியாளர்கள் (AE/JE Grade-I), உயர்அழுத்த, தாழ்வழுத்த மின் பாதைகளை, மின் சாதனங்களை, மின் மாற்றிகளை பராமரித்தல், உயர் அழுத்த, தாழ்வழுத்த மின்தடைகளை சரிசெய்தல், புதிய மின் இணைப்புகள் வழங்குதல், ஏற்கனவே உள்ள மின் இணைப்புகளில், மின் அளவிகளில் ஏற்படும் பழுதினை, மின் தடையை நீக்குதல், பயனீட்டாளர்களின் குறைகளை சரிசெய்தல், இயற்கை பாதிப்புகளால் ஏற்படும் தடைகளை சரிசெய்தல், புதிய திட்டங்களுக்கு ஆய்வு செய்து மதிப்பீடுகள் தயாரித்தல், அனுமதிக்கப்பட்ட திட்டங்களை செயல்படுத்துதல், R-APDRP / RGGVY போன்ற சிறப்பு திட்டங்களை அமல்படுத்துதல், அலுவலக கூட்டங்கள், Mass Raid, Mass Disconnection, உயர் அதிகாரிகளின்ஆய்வு, தகவல் அறியும் உரிமைச்

# Tamil Nadu Electricity Board Engineers' Sangam

சட்டத்தின் கீழ் பதில் அளித்தல், தணிக்கை பிரிவு குறிப்புகளுக்கு பதில் அளித்தல், வாரியம் கோருகின்ற தகவல்கள் (Field Reports / Statistics) அளித்தல், மின் பயனீட்டு தொகைகளை (CC Charges) வசூலித்தல், அதில் ஏற்படும் குறைபாடுகளை சரிசெய்து பயனீட்டாளர்களுக்கு உரிய சேவை புரிதல், அலுவலக நேரம் முடிந்து, நடு இரவாக இருந்தாலும் பயனீட்டாளர்களின் கைபேசி அழைப்பை ஏற்று செயல்படுதல் என்று மிகக்கடுமையான பணிச்சுமையில் பணியாற்றி வருகின்றனர்.

மேற்கூறிய பணிகளையும், பொறுப்புகளையும் பெரும்பாலும் குறைந்தபட்ச பணியாளர்களைக்கொண்டுதான் பிரிவுகளில் செயல்படுத்த முடிகிறது.

காலை முதல் நள்ளிரவு வரை கைபேசி உபயோகத்தில் இருப்பதாலும், நூற்றுக்கணக்கான பயனீட்டாளர்கள், அலுவலர்கள், பணியாளர்களுடனும் பிரிவுப் பொறியாளர்கள் தொடர்ந்து பேசி வருவதாலும் ஒரு சில சமயங்களில் பயனீட்டாளர்கள் அழைப்பு ஏற்க இயலாமல் போவதற்கு வாய்ப்பு உள்ளது. தொடர்ந்து பேசுவதால் கைபேசியின் மின்சாரம் (Charge) குறைந்து அழைப்புகள் ஏற்க இயலாமலும் போவதுண்டு. பல்லாயிரக்கணக்கான பணியாளர்களில் ஓரிரு தவறுகள், தாமதங்கள் ஏற்படுவது தவிர்க்க இயலாது. இருப்பினும் அதையும் சரிசெய்து மின்சார வாரியத்திற்கும், அரசுக்கும் நற்பெயரை பெற்றுத்தரும்படி பணிசெய்வதை அனைத்து நிலைகளில் வற்புறுத்திவருகிறோம். அதன்படியே பணியாற்றுகிறோம்.

பல்வேறு பொதுத்துறை, அரசுத்துறை நிறுவனங்களோடு ஒப்பிடும்போது, தமிழ்நாடு மின்சார வாரியப்பணி மிகவும் அத்தியாவசியமானதும், ஆபத்தானதும் கூட. இருப்பின் பிற துறைகளைக்காட்டிலும் மின்சார வாரியப்பணி சிறப்பாகவும், துரிதமாகவும் உள்ளது என்பதை மறுக்க இயலாது.

மின்சார வாரியத்தலைவர் அவர்களின் அயராத பணியினாலும், இயக்குனர்கள், உயர் அதிகாரிகள், பொறியாளர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோரின் ஈடுபாட்டினாலும் மின்வாரியப் பணிகள் சிறப்பாக, விரைவாக நடைபெற்று வருகிறது. உதாரணமாக சமீபத்தில் சென்னை தெற்கு வட்டத்தில் ஏற்பட்ட துணைமின்நிலைய பழுதினை சரிசெய்திட இயக்குனர் / விநியோகம் அவர்களும், தலைமைப் பொறியாளர், பொறியாளர்கள் மற்றும் பணியாளர்களும் அதிகாலை சுமார் 3 மணி வரையிலும் களத்தில் இருந்து மின்தடையை சரிசெய்துள்ளனர்.

இச்சூழ்நிலையில் பொறுப்புள்ள நாளிதழாகிய தினமலரில் வெளியிடப்படும் செய்தி, தவறான தகவல்களை அடிப்படையாக கொண்டு வெளியிடப்பட்டுள்ளது வருத்தமளிக்கிறது.

தினமலர் போன்ற நாளிதழ்கள் மின்சார வாரியப் பணிகளையும், பொறியாளர்கள் மற்றும் பணியாளர்களை ஊக்கப்படுத்தும் விதமாக செய்திகள் வெளியிட்டு பொதுமக்கள் சேவையை மேலும் அதிகப்படுத்திட ஒத்துழைக்க வேண்டுகிறோம். இச்செய்தியினை தங்கள் நாளிதழில் வெளியிடும்படி கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி,

இப்படிக்கு,

17/9/14

( வி. அசோக்குமார் )
பொதுச் செயலாளர்.